தமிழ் நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை 1974 ஏப்ரல் 1.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. அரசினர் தீர்மானம.

வினா நேரத்தைத் தள்ளி வைத்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "சட்டப் பேரவை 22-ம் விதியின் கீழ், முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்—விடைகள்" என்று உள்ளதை இன்று தள்ளிவைத்து, நிகழ்ச்சி நிரலில் அடுத்து உள்ள "மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்" என்றுள்ளதை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் முன் மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு எடுத்துக்கொள்வதாக இருந்த வினாக்கள் நாளை எடுத்துக்கொள்ளப்படும். இப்பொழுது மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

2. நடைமுறைக் கேள்வி.

வினா நேரத்தை நிறுத்தி வைக்க பேரவை அனுமதியளிக்கும் முன்னரே, வினா நேரம் இல்லை என உறுப்பினர்களுக்கு மடல் அனுப்பியது குறித்து.

DR. H. V. HANDE : Sir, on a point of order. Yesterday, we had received a communication from the Assembly Office that the Question Hour would be suspended and probably that was discussed in the meeting of the Business Advisory Committee and I am not going into it. The normal practice is that such a communication is not sent to us before the House decides that the Question Hour should be suspended. As such a communication has been sent to us before the decision of the House, it would amount to almost a contempt of the House. I am just bringing this to the attention of the Hon. Speaker to point out that it was irregular on the part of the Department to have sent as a communication that the Question Hour would be suspended.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

இப்பொழுது பேரவை முன்னவர் தீர்மானம் முன் மொழிந்தது சரி தான். அது பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதும் சரிதான். அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம். ஆனல், முன் கூட்டியே எங்களுக்கு அனுப்பியது சரியல்ல. அது ஹைலி இர்ரெகுலர். It will even amount to contempt of the House.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்ற இந்தத் தாக்கீதில் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் எடுக்கப்பட்ட முடிவுகளைப் பற்றிய விவரங்கள் தான் அறிவிக்கப்பட்டிருக்கின்றனவே தவிர வேறல்ல. அலுவல் ஆய்வுக் குழுவில் என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டிருக் கின்றன என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த முடிவுகளைக் கூட இங்கே அவையின் மரபுப்படி மாற்றிவிடக் கூடும். ஆகவே, இதை ஒழுங்குப் பிரச்னையாக எடுத்துக்கொள்ளாமல் அவை நடவடிக்கைகளை நடத்து வதற்கு உதவிகரமாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப் பட்ட முடிவுகள் நேற்று முன்தினமே அவையில் அறிவிக்கப்பட்டுவிட்டன. ஒரு வேளை டாக்டர் ஹாண்டே அப்பொழுது அவையில் இல்லாமல் இருந்தி ருக்கலாம். அது அவையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, டாக்டர் ஹாண்டே எழுப்பியதில் எந்த விதமான பாயிண்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

3. 1974-75-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 18,45,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

THIRU P. SOUNDARAPANDIAN: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 18,45,300 under Demand No. 8—Elections be reduced by Rs. 100."

THIRU J. JAMES : Sir to discuss policy, I move—

"That the allotment of Rs. 18,45,300 under Demand No. 8—Elections be reduced by Rs. 100."

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, ஓட்டுச் சாவடிகளை அமைக்கும்போது தற்பொழுது உள்ள தூரத்தைக் குறைத்து அமை மைலுக்கு அதிகம் போகாமல் செய்ய வேண்டும் என்பது பற்றி விவாதிக்க—